திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: இத்தகைய தேச விரோதச் செயல்களில் ஈடுபடும் நபர்களுக்கு அன்னிய நாடுகள், அதுவும் அமெரிக்கா போன்ற நாடுகள் ஏதாவது இதில் தூண்டுதலாக நடந்துகொள்ளக்கூடிய வகையில் இருப்பதாக அரசுக்கு ஏதாவது தகவல் உண்டா? இது விஷயமாக மத்திய புலனாய்வுத்துறை ஈடுபட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அன்னிய நாடுகள் உதவி செய்திருக்கிறார்கள் என்றால் இப்படிக் கையினால் எழுதியா ஒட்டியிருப்பார்கள்? அன்னிய நாட்டு உதவி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அன்னிய நாட்டு உதவி இருப்பதாக இந்தச் சாதாரண விஷயத்திற்கு நாம் எடுத்துக் கூறுவதன் மூலம் இதைப் பெரிய விஷயமாக ஆக்கிவிடக் கூடாது என்று நான் கருதுகிறேன்.

Hut-dwellers of Ayodya Kuppam

* 521 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minsiter be pleased to state—

(*a*) whether the hut-dwellers in Ayodya Kuppam in the Marina area in Madras City have been moved into new buildings; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) இதுவரை இப்பகுதியில் 180 குடும்பங்களுக்கு இடம் அளிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் இன்னும் 356 குடும்பங்கள் குடிசைகளில் வசிக்கின்றன என்று கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இப்போது 200 குடியிருப்புகள் தயாராகிக்கொண்டிருக்கின்றன. இவை இன்னும் சுமார் 4 மாதங்களில் கட்டி முடிக்கப்படும். இக்குடியிருப்புகள் தயாரானவுடன், 200 குடும்பங்கள் இவைகளில் குடியேற்றப்படுவர். எஞ்சியுள்ள குடும்பங்களுக்குக் கட்டப்படும் குடியிருப்புகள் 1972-73-ம் ஆண்டு இறுதிக்குள் முடிவடையும். குடியிருப்புகள் தயாரானதும் அவைகளில் இக்குடும்பங்களுக்கு இடம் அளிக்கப்படும்.

Dr. H. V. HANDE: Sir, will it be possible for the Hon. Chief Minister to give us an indication that whenever persons are rehabilitated like this, (1) they would be removed from the huts only after alternative arrangements are made and (2) whether it is possible to rehabilitate them as clost to their present living place as possible ?

1972 மார்ச் 17]

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் கேட்டதைப் போலத்தான் அந்த வசதிகள் செய்துகொடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் குடிசைவாழ் மக்களுக்குத் துன்பங்கள் ஏற்படவேண்டாம் என்று அவர்களுக்கு நிரந்தரமாக வாழ்க்கை வசதி செய்து கொடுப்பதற்காகக் கட்டப்படுகின்றன அந்த வீடுகள் என்ற காரணத்தினல் அவர்களும் குடிசை மாற்று வாரியத்தோடு ஒத்துழைப்பது நலமாக இருக்கும்.

திரு. எஸ். வடிவேல்: தமிழ் நாட்டில் எல்லாக் குடிசைவாழ் மக்களுக்கும் இப்படிப்பட்ட வீடுகள் கட்டிக்கொடுக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: இப்பொழுது சென்னையில் முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. மதுரை, திருச்சிராப்பள்ளி, கோவை போன்ற சில நகரங்களில் வீட்டு வசதி வாரியத்தினல் குறைந்த அளவில் திட்டமிடப்பட்டு, இந்த ஆண்டு முதல் இந்தக் காரியங்கள் செய்யப்படலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல்: ஒரு பகுதியில் இருக்கிற குடிசைவாழ் மக்களை இன்னொரு இடத்திற்குக் கொண்டு போய் வைக்கின்ற நேரத்தில் அந்தக் குடிசைவாழ் மக்களுடைய கருத்தைக் கேட்டு, அவர்கள் விருப்பத்தின்பேரில் தானே இந்தக் காரியங்கள் செய்யப்படுகின்றன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: ஆமாம்.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

*522 வின.—**திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையை (Legislative Council) விட வேண்டுமென்ற செயற்குறிப்பை மத்திய அரசுக்குத் தமிழ்நாடு அரசு அனுப்பியுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: இல்லை.

திரு. கே. எ. வகாப்: இந்தியத் துணைக் கண்டத்தில் சில மாநிலங்களில் அப்படி மேலவைகள் எடுக்கப்படுவதற்கு மத்திய அரசு அனுமதி அளிக்கவில்லை. இருப்பவர்கள் அதிகமாக இடம் கேட்கின்ற காரணத்தினல், இந்த மேலவையை விரிவுபடுத்துவதுபற்றி அரசு யோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: கேட்பவர்களுக்கொல்லாம் இடம் ஒதுக்குவதற்கு மேலவையை விரிவுபடுத்துவது என்று சொன்னல், சென்னையில் ஒரு புதிய கட்டடம் கட்டினலும் போதுமானதாக இருக்காது. ஆனல் சட்ட